கழக – கூட்டணிக் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பு!

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா சாலிகிராமம் திவாகர் நகர், தசரதபுரம், குலசேகரபுரம் பகுதியில் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை, 2026 ஆம் ஆண்டு கழக தேர்தல் அறிக்கை சிறப்பு அம்சங்களை தெரிவித்து வாக்கு சேகரித்தார்.

தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு பர்கிட் சாலை சந்திப்பில் கழகத் தலைவர் அவர்கள் வாக்கு சேகரித்த போது, தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார், அமைப்பு செயலாளர் நா.செல்வகுமார், மற்றும் தலைமைச் சங்க நிர்வாகிகள், சங்க முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு வரவேற்பு அளித்து வாக்கு சேகரித்தனர்.

திரு.வி.க. நகர் 72 வது வட்டத்தில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரனை ஆதரித்து தெருமுனை கூட்டம் நடந்தது. இதில் மாற்றுத்திறனாளி மாநில துணை அமைப்பாளர் க.எழிலன் விக்னேஷ் உதயன் இளம் பேச்சாளர் மற்றும் ஐ.சாமுவேல் இளம் பேச்சாளர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கழக துணை அமைப்பு செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, செ.தமிழ் வேந்தன், திரு.வி.க. நகர் வடக்கு பகுதி செயலாளர் 72 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் மு.சரவணன், 72வது (அ) வட்ட செயலாளர் எம்.இசட்.அபோய் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் பி.கே.சேகர்பாபுவை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் துறைமுகம் மேற்கு பகுதி, 57வது வட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் எல்.பி.எப்.மோகன் தலைமையில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், வட்டச் செயலாளர் ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் கலை, மணிமாறன் வரவேற்பில் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து சைதை மேற்கு பகுதி 139வது 'அ' வட்டத்தில் பாகம் 7 மற்றும் 8ல் உள்ள அப்பாதுரை தெரு, வீதியம்மன் கோயில் தெருவில் களத்தில் இளைஞர் அணி சார்பில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஜிம் பிரபு தலைமையில் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்ற முழக்கத்துடன் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். உடன் இளைஞரணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

கோவை தெற்கு தொகுதி தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க ஆலோசனைபடி, 18.4.2026 அன்று சங்க மாநில முன்னாள் தலைவர் கே.சசிகுமார் மற்றும் நிர்வாகிகள் தலைமையில் கழக வெற்றி வேட்பாளர் செந்தில் பாலாஜியை ஆதரித்து 65 வது வட்டத்தில் ராம் நகர் பகுதியில் வட்ட செயலாளர் ராமநாதன், மாநகராட்சி கவுன்சிலர் விந்தியா ராமநாதன், ஐடி.விங். சரவணன், கணேஷ், மைதிலி ஆகியோருடன் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர்.

இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சார நாளில்

சைதாப்பேட்டையில் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி!

கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் பங்கேற்கிறார்!

சென்னை, ஏப்.21-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப் பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் இன்று (21-04-2026) பிற்பகல் 2 மணி சைதை கிழக்குப் பகுதியில் உள்ள வட்டங்கள் வாரியாகவும், சைதை மேற்குப் பகுதியில் உள்ள வட்டங்கள் வாரியாகவும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியில் பங்கேற்று வாக்கு கேட்கிறார். அதன் விவரம் வருமாறு:

சைதை கிழக்குப் பகுதி: 168 அ வட்டத்தில் உள்ள அருளாயம்மன்பேட்டையில் தொடங்கி, ரெட்டித் தெரு, ஜவஹர்லால்நேரு சாலை, 168வது வட்டம் பூவிருந்தவல்லி சாலை, கங்கையம்மன் கோயில் தெரு, காந்திநகர், அம்பாள் நகர், ஜவஹர்லால் நேரு சாலை, கத்திப்பாரா, கிண்டி வழியாக செல்லம்மாள் கல்லூரி திரும்பி 170வது வட்டம் ரேஸ்கோஸ் சாலை, பிள்ளையார் கோயில் தெரு, 170 அ வண்டிக்காரன் தெரு, நேருநகர், வேளச்சேரி சாலை, கன்னிகாபுரம், 169வது வட்டம், வெங்கடாபுரம் எதிர்புறம் எல்.டி.ஜி. சாலை, கல்லறை சாலை வழியாக தாலுக்கா அலுவலகச் சாலை, சர்தார் பட்டேல் சாலை, 170 அ மேற்கால்வாய்கரை சாலை, எல்லையம்மன் கோயில் தெரு, 170வது வட்டம் பொன்னியம்மன் கோயில் தெரு, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம் சித்ராநகர், நந்தனம் வழியாக 169 அ எம்.சி.ராஜா விடுதி திரும்பி சி.ஐ.டி. நகர் முதல் மெயின்ரோடு, கண்ணாம்மாபேட்டை வழியாக, எஸ்.பி.கார்டன், அப்பாவு நகர், சூடியம்மன்பேட்டை தெரு, மசூதித்தோட்டம் ஜோன்ஸ் சாலை முடிவடையும்.

சைதை மேற்குப் பகுதி : 142வது வட்டம் குயவர் வீதியில் தொடங்கி சேஷாசலம் தெரு, தருமராஜா கோயில் தெரு, ஜானிஸ் சாலை, ஆலந்தூர் சாலை சுரங்கப்பாதை வழியாக ஆலந்தூர் சாலை, மசூதி தெரு, கொத்தவால்சாவடி தெரு, 142 அ வட்டத்தில் பெருமாள் கோயில் மாடவீதியில் தொடங்கி பெருமாள் கோயில் தெரு, வி.எஸ்.முதலி தெரு, காரணீஸ்வரர் கோயில் தெரு, குளக்கரை தெரு, ஒத்தவாடை தெரு, கடும்பாடியம்மன் கோயில் தெரு, 140 அ வட்டத்தில் ஆவின் பூத் தொடங்கி கோடம்பாக்கம் சாலை, ஜோன்ஸ் சாலை, சடையப்பன் தெரு, ரெட்டிக்குப்பம் சாலை, குமரன் காலனி, பழைய மாம்பலம் சாலை, கிருஷ்ணப்பன் தெரு, கோடம்பாக்கம் சாலை மார்கெட், 140வது வட்டம் நாகாத்தம்மன் கோயில் தெரு, எல்.ஐ.சி காலனி, 11 அவென்யூ கல்நார் வீடு, பெருமாள் கோயில் தெரு, கன்னியம்மன் கோயில் தெரு, வடக்கு கவரை தெரு, தலையாரி தெரு, கோவிந்தன் சாலை, நாகரத்தினம்மாள், புஷ்பாவதியம்மாள் கோயில், ஜோதிராமலிங்கம் தெரு, கே.ஆர்.கோயில் தெரு, ரெட்டிக்குப்பம் தெரு, பன்னீர்செல்வம் நகர், மாதா கோயில் தெரு, தனபால் தெரு, கோடம்பாக்கம் சாலை, திருவள்ளுவர் தெரு 142 அ வட்டத்தில் திருவள்ளுவர் தெரு, சுப்பிரமணிய சாலை, ஜெயராஜ் தியேட்டர், 139 அ வட்டம் - நியூ காலனி மெயின்ரோடு, 3வது தெரு, விஜயராகவன் தெரு, வேணுகோபால் தெரு, ஜோன்ஸ் - ராஜாம்பாள் சாலை, செல்வவிநாயகர் கோயில் தெரு, வி.எஸ். முதலி கார்டன், ஜோன்ஸ் சாலை, சாரதிநகர் மெயின் ரோடு, 139வது வட்டத்தில் கங்கையம்மன் கோயில் தெரு, முத்துரங்கம் பிளாக், எஸ்.வி.சிதம்பரம் சாலை, கங்கையம்மன் கோயில் அருகில் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சார மேடை அருகே முடிவுடையும்.

குறிப்பு : அனைத்து வட்டங்களிலும் வாகனப் பிரச்சாரத்தில் வருகிற தோழர்கள் அனைவரும் இறுதி பிரச்சாரம் நடைபெறும் இடத்திற்கு தவறாமல் வருகைத் தர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மயிலை தொகுதி கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

கிழக்கு - மேற்குப் பகுதியில் இரு சக்கர வாகன பிரச்சாரம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு அறிக்கை!

மயிலை த.வேலு தெரிவித்துள்ளார்.

சென்னை, ஏப். 21-

மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளரும், மாவட்ட கழக செயலாளருமான மயிலை த.வேலு அறிக்கை வருமாறு:

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, திராவிட முன்னேற்ற கழக வெற்றி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து, மயிலை கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் 21/04/2026 இன்று காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் இரு சக்கர வாகன பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளார்.

124 வது வட்டம் முண்டகக்கண்ணியம்மன் தெரு, சண்முகப் பிள்ளை தெரு, நாட்டான் தோட்டம், பட்டுநூலக்காரர் தோட்டம், ராமகிருஷ்ணா புரம்,

124 - அ வட்டம் சத்தியவாணிமுத்து நகர், சாரதா புரம், இந்தியன் பேங்க் மாட வீதி, டி.வி.எஸ் கோவில் தெரு, ஆர் கே மட் தெரு, புதுத் தெரு

125 வது வட்டம் கைலாசபுரம், மீனாம்பால் புரம், ரூதர் புரம், காரானீஸ்வரர் பக் கோடா தெரு, நொச்சி குப்பம், நொச்சி நகர், காரானீஸ்வரர் கோவில் தெரு, பஜார் ரோடு

125 அ வட்டம் அப்பு தெரு, டுமிங் குப்பம், குயில் தோட்டம், சாந்தோம் நெடுஞ்சாலை, கச்சேரி ரோடு,

126 வது வட்டம் ராஜீவ்காந்தி நகர், பவானி குப்பம், லீத் கேசில் சர்ச் ரோடு, லாசர் சர்ச் ரோடு, சின்ன காரகுட்டை, பெரிய காரகுட்டை, வன்னியம்பதி.

171 வது வட்டம் வல்லீஸ்வரர் கோவில் தோட்டம், கே. வி. பி. கார்டன், நாராயணசாமி தோட்டம், ராமகிருஷ்ணா ராஜா அண்ணாமலை புரம் நகர்,

171 அ வட்டம் சினிவாசபுரம், அன்னை சத்யா நகர், எஸ்.கே.பி புரம், பசுமைவழிச் சாலை

121 வது வட்டம் கணேசபுரம், வீர பெருமாள் கோவில் தெரு, அப்பர் சாமி கோவில் தெரு, திருவீதி அம்மன் கோவில் தெரு

121 அ வட்டம் பி.எம்.தர்கா, லாய்ட்ஸ் ரோடு, கோகுலம் காலனி, ரோட்டரி நகர், மாயாண்டி காலனி, கபாலி நகர்

122 வது வட்டம் ஆலையம்மன் கோவில் தெரு, சத்தியமூர்த்தி நகர், அன்பு காலனி, டேங்க் பண்ட் ரோடு

122 அ வட்டம் ஆஸ்டின் நகர், பைகிராப்ட்ஸ் நகர், பக்ஸ் ரோடு, ராதா கிருஷ்ணபுரம், போட் கிளப்

123 வது வட்டம் திருவள்ளுவர் சாலை, வன்னிய புரம், ஜெகநாத தோட்டம், கரிமேடு

123 அ வட்டம் குருபுரம், விசாலாட்சி தோட்டம், கன்னிக்கோவில் மேடு, பல்லக்குமாநகர், கபாலி தோட்டம்

எனவே, மயிலாப்பூர் தொகுதி அணைத்து கழக நிர்வாகிகள், மற்றும் அனைத்து கூட்டணி கட்சி தலைவர்கள், மற்றும் கழக தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளபடுகிறது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்

மயிலை தொகுதி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து

கமல்ஹாசன் 124 (அ) வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, ஏப்.21-

மயிலை தொகுதி வெற்றி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து இன்று கமலஹாசன் அவர்கள் வாக்கு சேகரிக்கிறார். இதுகுறித்து வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மயிலை தொகுதி வெற்றி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமலஹாசன் அவர்கள் இன்று (21-4-2026 - செவ்வாய்கிழமை மதியம் 3 மணியளவில் 124 (அ) வட்டம் கிழக்கு மாட வீதி, மயிலை மாங்கொல்லையில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இந்நிகழ்வில் 124 (அ) வட்டக் கழக அனைத்து நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மகளிர் அணியினர் பெருதிரளாக கலந்து கொள்ளுமாறு வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.